உ

சிவமயம்




யாழ். பருத்தித்துறை ஆத்தியடியைப் பிறப்பிடமாகவும்,
இலண்டனை வதிவிடமாகவும் கொண்ட

# அமரர் திரு குமாரவேல் இரவீந்திரநாதன்

அவர்களின் நினைவாக வெளியிடப்பட்ட

# நினைவு மலர்

26.08.2017

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி உருகி ஒளியூட்டி,
ஆலமரமாக எம் குடும்பத்திற்கு நிழல் பரப்பி
எம்மையெல்லாம் அன்போடும் பண்போடும் பாசத்தோடும்
வளர்த்து நல்வழிகாட்டி,
நற்கல்வியூட்டி, உறுதுணையாக இருந்து
சொந்த பந்தங்கள் அனைவருக்கும் பக்கபலமாய் இருந்து
சீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய்,
குடும்பத்தின் தலைவராக, தந்தையாக மனம் பல
மாண்புடன் பரப்பி இனமெல்லாம் இன்புடன் வாழ
ஏற்ற நற்பணிகள் காத்து வையத்துள்
என்றும் நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினிய மலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி

**என்றும் நீங்கா நினைவுகளுடன்**
**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


உ

சிவமயம்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்

# அமரர் திரு குமாரவேல் இரவீந்திரநாதன் அவர்கள்

அன்னை மடியில்
24 * 12 * 1956



ஈசன் அடியில்
26 * 07 * 2017





## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த ஆடித்திங்கள்
பூண்ட பூர்வபக்க சதுர்த்திதனில் - மாண்பு
குமாரவேலு மைந்தன் இரவீந்திரநாதன் ஐயன்
குமாரவேலன் பதமடைந்தார் காண்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்



திருச்சிற்றம்பலம்

## விநாயகர் துதி

வானுலகும் மண்ணுலகும் வாழ மறைவாழப்
பான்மைதரு செய்ய தமிழ் பார்மிசை விளங்க
ஞானமத ஐந்துகர மூன்றுவிழி நால்வாய்
ஆனைமுக னைப்பரவி அஞ்சலிசெய் கிற்பாம்

## தேவாரம்

தோடுடைய செவியன் விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுட லைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமல ரான்முனைநாட்பணிந் தேத்த அருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மா னிவனன்றே

## தேவாரம்

பிடியதன் உருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடும் அவரிடர்
கடிகணபதி வர அருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை இறையே

## தேவாரம்

கூற்றாயின வாறு விலக்ககி லீர்
கொடுமை பலசெய் தன நான் அறியேன்
ஏற்றாய் அடிக்கே இரவும் பகலும்
பிரியாது வணங்குவன் எப்பொழுதும்
தோற்றாது என் வயிற்றின் அகம் படியே
குடரோடு துடக்கி முடக்கியிட
ஆற்றேன் அடியேன் அதிகைக் கெடில

## தேவாரம்

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணைத் திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணைப் பூட்டி யோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே

*- In Loving Memory of Late Mr. Kumaravel Raveendranathan -*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவாரம்

நிரைகழல் அரவம் சிலம்பொலி அலம்பும்
நிமலர் நீறணி திருமேனி
வரைகெழு மகள் ஓர் பாகமாப் புணர்ந்த
வடிவினர் கொடியணி விடையர்
கரைகெழு சந்துங் கார்அகிற் பிளவும்
அளப்பருங் கனமணி வரன்றிக்
குரைகடல் ஓதம் நித்திலம் கொழிக்கும்
கோணமா மலை யமர்ந்தாரே

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவி லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம்

## திருப்புகழ்

ஏறுமயில் ஏறிவிளை யாடுமுகம் ஒன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுகம் ஒன்றே
கூறும் அடியார்கள்வினை தீர்த்த முகம் ஒன்றே
குன்றுருவ வேல் வாங்கி நின்ற முகம் ஒன்றே
மாறுபடு சூரரை வதைத்த முகம் ஒன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுகம் ஒன்றே
ஆறுமுக மானபொருள் நீ அருளல் வேண்டும்
ஆதி அருணாசலம் அமர்ந்த பெருமாளே

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்.

நமச்சிவாய வாஅழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அநேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்

பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்

ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாற் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையாய் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி

மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்

நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாயக் கிடந்த அடியேற்குத்
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெய்ஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்த சஷ்டி கவசம்

காப்பு

## நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம்போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்தோங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமல ரருள்கந்தர் சஷ்டி கவசந் தனை

## குறள் வெண்பா

அமரரிடர் தீர அமரம் புரிந்த குமரனடி நெஞ்சே குறி.

நிலமண்டல ஆசிரியப்பா

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாத மிரண்டில் பன்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணியாட
மைய நடனஞ்செயும் மயில்வா கனனார்
கையில் வேலாலெனைக் காக்கவென்று வந்து
வர வர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக
இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரஹண பவனார் சடுதியில் வருக

ரஹண பவச ரரரர ரரர
ரிஹண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரஹண வீரா நமோ நம
நிபவ சரஹண நிறநிற நிறென
வசர ஹணப வருக வருக
அசுரர் குடிகெடுத்த ஐயா வருக
என்னை யாளு மிளையோன் கையில்
பன்னிரண்டாயுதம் பாசாங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண்டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயுங் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் மொளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாஞ்சிவ குகன்றினம் வருக

ஆறு முகமும் அணிமுடி யாறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும் -
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூ ஷணமும் பதக்கமுந் தரித்து
நன்மணி பூண்ட நவரத்தின மாலையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழகுடைய திருவயி றுந்தியும்
துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்தினம் பதித்த நற்சீ ராவும்
இருதொடையழகும் இணைமுழந்தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகென
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேல் முந்து

என்றனை யாளும் ஏரகச் செல்வா
மைந்தன் வேண்டும் வரமகிழ்ந்துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்
உன்றிருவடியை உறுதியென் றெண்ணும்
என்றலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியை புனிதவேல் காக்க
கதிர்வேலிரண்டு கண்ணினைக் காக்க
விழிசெவியிரண்டும் வேலவர் காக்க
நாசிகளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய் தனைப்பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க

கன்னமிரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க
வடிவே லிருத்தோள் வளம்பெறக் காக்க
பிடரிகளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதினாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவே காக்க
சிற்றிடை யழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண்குறி யிரண்டும் அயில்வேல் காக்க
பிட்டமிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வல்வேல் காக்க
பணைத் தொடையிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க

ஐவிர லடியினை அருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கைகளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவ ளிருக்க
நாவிற் சரஸ்வதி நற்றுணையாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பா நாடியை முனைவேல் காக்க
எப்பொழுதும்மெனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பக றன்னில் வச்சிரவேல் காக்க
அரையிரு டன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமத நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியி னோக்க

தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடி படி
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற்படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்றும் புழைக்கடை முனியும்
கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட்சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசி காட்டேறி இத்துன்ப சேனையும்
எல்லிலு மிருட்டிலும் எதிர்படு மண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோடனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டாளங்களும்
என்பெயர் சொல்லவும் இடி விழுந்தோடிட

ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகளென்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைகளுடனே பலகலசத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
கால தூதாளென்னைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரண்டு புரண்டிட
வாய்விட்டலறி மதிகெட் டோடப்
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடலங்கம் கதறிடக் கட்டு
கட்டி யுருட்டு கால்கை முறிய
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு விழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதிற் செதிலாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலதுவாக
விடுவிடு வேலை வெருண்டது வோட
புலியும் நரியும் புன்னரி நாயும்
எலியுங் கரடியுங் இனித் தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடுவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினி லிறங்க
ஒளிப்புஞ்சு ளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ்சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசுஷயங் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் புருதி
பக்கப் பிளவை படர் தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத் தரணை பருவரை யாப்பும்

எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீயெனக் கருள்வாய்
ஈரேழுலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவருமெனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன்றிரு நாமம்
சரவண பவனே சைலொளி பவனே
திரிபுரபவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர்வே லவனே
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை அழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா

பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத் தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்
பாடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீக்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் இரட்சி அன்னமுஞ் சொன்னமும்
மெத்தமெத் தாக வேலா யுதனார்
சித்தி பெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க வாழ்க வாரணத் துவசன்

வாழ்க வாழ்க என் வறுமைகள் நீங்க
எத்தனை முறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செயினம்
பெற்றவன் நீ குரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள் செய்
கந்தர் சஷ்டி கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசாரத்துடன் அங்கந் துலக்கி
நேசமுட னொரு நினைவது வாகி
கந்தர்சஷ்டி கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு

ஓதியே ஜெபித்து உகந்துநீ றணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்ன ரெண்மர் சேர்ந்தங் கருளுவர்
மாற்றல ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்
நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளுமீ ரெட்டா வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரைப் பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட் சுமிகளில்
வீரலட் சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத்தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழநிக் குன்றினிலி ருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
என்னைத் தடுத் தாட்கொள என்றனதுள்ளம்
மேவிய வடிவுறும் வேலவ போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேளே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில் நடமிடு வோய் மலரடி சரணம்
சரணம் சரணம் சரவண பவஓம்
சரணம் சரணம் சண்முகா சரணம்

- கந்த சஷ்டி கவசம் முற்றிற்று -


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வரலாறு

கடல்சூழ் ஈழமாந்தீவின் நெற்றித்திலகமாம் யாழ்நகரின் கீழ்ப்பாகமான வடமராட்சிப் பகுதியில் சைவமும் தமிழும் தமதிரு கண்கள் எனப் போற்றும் மொழி மதங்களாகக் கொண்ட பெருமக்கள் வாழும் ஆத்தியடியூரில் திருவாளர் கந்தையா குமாரவேல் அவர்களுக்கும் இல்லறத் துணைவியான தேவநாயகி அவர்களுக்கும் இளைய மகனாக 1956ம் ஆண்டு மார்கழி மாதம் 24ம் நாள் இப்புவியில் திருவாளர் இரவீந்திரநாதன் அவர்கள் பிறந்தார். இவர் ஸ்ரீஸ்கந்தராஜா (சறோஜாதேவி), சாரதாதேவி (மகாதேவன்), திரௌபதி (ஜெய் இந்திரன்) ஆகியோரைப் பாசமிகு அன்புச் சகோதரர்களாக அமையப் பெற்றார்.

இவர் ஆரம்பக் கல்வியை வடமராட்சி இந்து மகளிர் கல்லூரியிலும், உயர்தரக் கல்வியை பரு. ஹாட்லிக் கல்லூரியிலும் பயின்றார். இவர் கல்வி கற்கும் காலங்களில் சித்திரம் வரைவதில் மிகவும் திறமையானவராகவும், ஆசிரியர்களின் அன்பையும், பாராட்டுதல்களையும், பரிசில்களையும் பெற்றுள்ளார்.

தனது பதினொராவது வயதில் தனது அன்புத் தந்தையாரை இழந்து தனது தாயாரின் வழிநடத்தலிலும், தனது அப்பாவாக ஏற்று, தனது அன்பு அண்ணாவின் சொற்கேட்டும் தன் வாழ்க்கையைத் தொடர்ந்தார்.

அவர் தனது இளம் வயதிலேயே சவுதி அரேபியாவுக்குச் சென்று crane operator ஆகப் பணி புரிந்தார். இவருக்கு வாகனங்கள் பழுதுபார்ப்பதும், நுட்பமான கட்டிட வேலைகளை தனது வீட்டிற்குச் செய்து அழகு பார்ப்பதும், பிராணிகளை வளர்ப்பதும் கை வந்த கலை ஆகும்.

இவர் 1991ம் ஆண்டு இலண்டன் வந்து சேர்ந்தார். இந்நிலையில் இவர் வடமராட்சியில் சைவமும் தமிழும் தலைத்தோங்கிய புலவர்கள் நிறைந்த ஊரான புலோலியூரைச் சேர்ந்த திரு. திருமதி சுப்பிரமணியம் தம்பதிகளின் மூத்தமகளும், கணேசலிங்கம் (லதா), சரஸ்வதி (ரகுநாத்) ஆகியோரின் அன்புச் சகோதரியான கமலாதேவி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் நங்கையை 1993ம் ஆண்டு மாசி மாதம் 10ம் நாள் கைப்பிடித்தார்.

இக்கால கட்டத்தில் அவர் motor technician ஆகப் பணிபுரிந்ததுடன் நின்றுவிடாமல் தனது குடும்பத்திற்காக பல பொறுப்புகளையும் ஏற்று நடத்தினார்.

அவர்கள் இருவருக்கும் லவங்கன், பிரியங்கன் எனும் பிரகாசமான முத்துக்கள் செல்லப்பிள்ளைகளாகப் பிறந்தனர். அவர்களை நல்ல முறையில் வளர்த்து, நன்கு கற்பித்து மிகவும் கல்வியில் திறமையானவர்களாக

***"தந்தை மகற்கு ஆற்றும் நன்றி அவயத்து***
***முந்தி இருப்பச் செயல்"*** என்பதற்கு அமையத் திகழச் செய்தார்.

இவரது நற்பண்புகளில் மிகவும் சிறப்பானது, யார் என்ன உதவி கேட்டாலும் மாட்டேன் என்று சொல்வது அவரது வாழ்க்கையில் இல்லவே இல்லை. இவரை எல்லோரும் Handy man என்றுதான் அன்புடன் அழைப்பார்கள்.

இவ்வாறு இவர்கள் நால்வரும் மிகவும் சந்தோஷமாகவும், சுதந்திரமாகவும் வாழ்ந்து கொண்டிருந்த வேளையில் நியுமோனியா எனும் நோய் இந்தக் குடும்பத்தை நிலைகுலைய வைத்து விட்டது. குடும்பத்தின் ஆணிவேராக இருந்த இவர் மருத்துவப் பயனின்றி ஆடி மாதம் 26ம் நாள் இறைவனடி சேர்ந்தார்.

வீட்டிற்கு வருகின்ற விருந்தினரை முகம் மலர்ந்து வரவேற்று, அவர்களை உபசரித்து அனுப்பிவிட்டு இன்னும் வருபவர்களை எதிர்பார்த்துத் தானும் உண்ணும் பண்பு கொண்ட இவர்

**"செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்**
**நல்விருந்து வானத்தவர்க்கு"**

எனும் குறளுக்கு அமைய வானுலகத்தில் தேவர்களுக்கு நல்ல விருந்தினராவார் என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்போமாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மாவின் குமுறல்

அன்பு மகனே நீ எனக்கு இளைய மகனாய், செல்ல மகனாய் பிறந்தாய். நீ செய்த குறும்புகளையும், விளையாட்டுக்களையும் எண்ணிப் பார்த்துக்கொண்டிருக்கிறேன். சிறுவயதிலிருந்தே மற்றவர்களின் மனதை நோகடிக்காமல் கதைக்கும் பக்குவம் கொண்ட நீ எனக்குக் கிடைத்த ஒரு பொக்கிஷமே. உன் சிறுவயதிலேயே உன் அப்பாவும் என்னைப் பிரிந்து விட்டார். இன்று நீயும் நான் உயிருடன் இருக்கும் போதே பிரிந்து விட்டாய். நானுமோ வேண்டாத தெய்வமுமில்லை. 'என் பிள்ளையைக் காப்பாற்று' என்று. தெய்வத்திற்கு என் கதறலும், வேண்டுதலும் கேட்கவில்லை போலும். சிலவேளை உன்னைப் போன்ற நல்லவனைத் தன்னருகே வைத்துக் கொள்ள வேண்டும் என்று தான் எடுத்துச் சென்றுவிட்டாரோ! உன் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றேன்.

# Tribute from Eldest Son

Appa has been in everyone's lives. Everyone who knows Appa will have a moment that they will be able to associate with him. I am in a fortunate position of saying that I have had 22 years of lifetime of moments with Appa.

Appa was always a hard-working man. Appa had an 8 am to 8pm job as a mechanic, it was not an easy job. He always had cuts and scratches on his arms whenever he came home but that was not enough for him. He would somehow find a way to gain energy to go to more jobs. All this work that he did, all the income that he got, he never held that to himself. He would pass all that income to the rest of the family. The money he brought home was used to buy every single thing that I own. If Preyangan or I wanted or needed anything, whether it is clothes, books, games or electronics, he would never say no. Even though if it was expensive Appa will take us to buy the thing.

Appa had determination and drive that I know that I can never match. He wanted to give us a fantastic life with everything that we need. He worked tirelessly in order to get us everything. A single piece of his legacy is our



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

house, he made that house into a beautiful mansion but he was not able to rest properly in it.

Appa never had goals for himself, he only had aims and goals which orientated around Preyangan and me. Appa was only a mechanic but he wanted us to be educated and to be able to get highly respectable jobs and to be become a substantial individual in society. He would tell us not to worry about anything, he would bring the income into the family, and he would tell us to not worry about the money when coming to studies. That was the confidence to which I started my degrees, I am coming to end now and also am getting my career started as well. I believe he has succeeded in his goal.

Appa was very clever, he was a specialist with anything to do with cars but Appa has so much knowledge about other things, which is DIY related. If the house could speak it would tell that Appa has improved every single part of the house. Appa could change the floorboards, do the electrics and works the boilers as well. I always believe that if Appa had a father like I had then he would have been more successful than my brother and I.

Appa had a pure heart, always helped others. If anyone had an issue, whether it was impossible or possible, he would always say he would do it. With his ability and skill it most likely that he did fix the problem. Most people would know Appa from functions, any function Appa is always one of the front men getting stuff sorted and doing all the jobs.

Appa was a fantastic father to both me and Preyangan and a top-class husband to Amma and a gentleman to society. Appa has left us too early, he had a lot to see but I know he will have his eyes upon us. He has not left us alone, he has left his legacy and he will be a man that will not be forgotten.

**Lavangan** (Elder Son)

***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Tribute from Younger Son

There is so much to remember when it comes to Appa. He has always been there whether it was obvious or not.

As I got older and got slightly wiser, I realised that all these years of hard work were all for us. He did not have an easy office job either. He left all responsibility to Amma and he concentrated on bring in the income to help keep this family running. He worked for as long as he could, much more than what he should, just so he did not leave us with nothing. He has given us everything to keep our lives on track even though he is not here to help us. Doing what he did at his age was hard enough already, who knows how much longer he would have kept going if he was not stopped in his tracks. He worked so hard just to give us a decent run at life. He did this to get us to where we are now.

Appa always looked out for us, made sure we were not in any trouble. He would take us to university every time we needed to. And we didn't go to universities that were close. He had to drive 3 hours up to get to Leicester and 2 hours down to get to Southampton. Most of these days, he would take 5-6 hours to drop us off and go back home and then still go straight back to work.

People tend to say I am just like Appa. I have never felt prouder in my life to be told I am like my dad. But obviously, my dad is capable of so much which I will never be. He is a complete handyman. He is always up to something, whether it was fixing something or making something, he will never sit down quiet for too long. He knows everything off by heart and I can only aspire to be that.

He was such an amazing husband as well as a father. He always listened to Amma's opinions before making a decision. This is what made the



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

relationship between Appa and Amma perfect. As much as he was a loving husband and a caring father to us, he would like majority of the time with the house pets. He constantly looks after the fish tanks, making sure they have the best living conditions but most of all he likes to spend time with our cockatiel. They play all the time, they even fight all the time but the bird loved our dad more than any of us.

The last 7 months was golden to me, where he stayed at home for his shoulder operation. Even the last month where he was in hospital, he still fought through all his pain to give us that month with him. He didn't leave us suddenly, we talked plenty, to our hearts content and said our proper goodbyes but most of all, he went peacefully.

However hard it is for Amma and us to move on from his departure, we need to appreciate that he deserves a long rest. We all love you Appa and you will never be forgotten. I've achieved very little for him as of yet but everything I do from this point onwards will always be dedicated to him.

Thank you for everything.

**Preyangan** (Younger Son)

***


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

அணைந்தும் அணையா விளக்காய், அன்பு, பண்பு, பாசம் ஆகிய முக்கோணங்களிலும் சிறந்து வாழ்ந்து நல்வழி காட்டிய எங்கள் குடும்பத்தலைவர் அமரர் திரு.குமாரவேல் இரவீந்திரநாதன் அவர்கள் நோயுற்றபோது வீட்டிலும், மருத்துவமனையிலும் வந்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், அன்னார் இறைவன் திருவடியை அடைந்தபோது எங்கள் இல்லம் நாடி வந்து அனுதாபம் அளித்தவர்களுக்கும், மரணச்சடங்கில் கலந்து கொண்டு இறுதி மரியாதை செலுத்தியவர்களுக்கும், தொலைபேசி மூலம் ஆறுதல் வார்த்தை கூறி எங்கள் துன்பத்தைப் பகிர்ந்து கொண்டவர்களுக்கும், அன்னாரின் அந்தியேட்டி, சபீண்டீகரண நிகழ்வுகளை நடாத்திய அந்தணர்களுக்கும் அவற்றில் பங்கு கொண்டு ஆத்மா சாந்திக்காகப் பிரார்த்தனை செய்த நல்ல உள்ளங்களுக்கும் இன்றுவரை எமக்கு பல்வேறு உதவிகள் செய்து வரும் நண்பர்கள், உற்றார், உறவினர் அனைவருக்கும் இம்மலரினைன எமக்கு அழகுற பதித்துத் தந்த J.R Print நிறுவனத்தினருக்கும் எமது உணர்வுபூர்வமான நன்றிகளையும், வணக்கங்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

இங்ஙனம்

மனைவி, பிள்ளைகள்

உறவினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Designed & Printed @ JR Print www.jrdigitals.com T : 0208 503 6643